8th November 1966]

ஊழியர்களுக்குப் பென்ஷன் வழங்கும் திட்டம் யோசனையில் இருக்கிறது என்று கூறினார்கள். அந்த யோசனை எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : கனம் அங்கத்தினர் கேட்டதற்கு ஏற்கனவே பதில் அளித்தேன். அதற்குமேல் விவரம் என்னிடம் இல்லை.

## மூக்குப்பீறி பஞ்சாயத்து

* 528 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில், மூக்குப்பீறி பஞ்சாயத்துத் தலைவர் 1965-66-ம் வருடங்களில், அகாரணமாய் இரண்டு பஞ்சாயத்து மெம்பர்களை பதவியினின்றும் நீக்கியதன் மூலம் பதவியை துஷ்பிரயோகம் செய்து விட்டார் என்ற புகார் ஜில்லா கலெக்டருக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : (அ) ஆம்.

(இ) மூக்குபீறி பஞ்சாயத்து தலைவர் வேண்டுமென்றே சட்ட ஏற்பாடுகளையும், விதிகளையும் நிறைவேற்ற மறுப்பதால், அவரைப் பதவியினின்று நீக்குவதற்கு காரணம் காண்பிக்க சென்னை பஞ்சாயத்து சட்டம் 150-ஆவது பிரிவின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு அறிவிப்பு விடுத்திருக்கிறார்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்** : சார், புதிய சட்டப் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட பஞ்சாயத்துத் தலைவர் தவறுசெய்துவிட்டார் என்று அறிந்த பிற்பாடும்கூட அந்தப் பஞ்சாயத்துக்கு அந்தத் தகவலை அனுப்பி அந்தப் பஞ்சாயத்து உறுப்பினர்களுடைய பெருவாரியான ஓட்டுக்களைப் பெற்றுத்தான் அவரை நீக்கமுடியும் என்று விதிமுறைகள் இருக்கின்றனவா? அந்த விதிகளை மாற்றியமைக்கவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : சட்டத்தைத் திருத்தவேண்டிய அவசியமில்லை. இப்பொழுது இருக்கின்ற விதிகளின்படி நடவடிக்கை எடுக்கலாம்.

## *Property tax*

* 529 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have proposed to defer the quinquennial revision of property tax in all Municipalities in the State, with effect from April 1966; and

(b) if so, the reasons therefor?